# A WORD OF ADVICE

If You are ever in need of
Pure Musk, Saffron, Shilajit,
Hing, Pearls &
Himalayan Drugs etc., etc.,

Never make Experiments with
Un-Known and
Un-Reliable Firms

*Have your requirments from :—*

## KALIA BROTHERS (Regd.)

JULLUNDUR CITY—N. INDIA

*

## ஓர் ஆலோசனை

எப்போதும் சுத்தமான கஸ்தூரி,
குங்குமப்பூ, சிலாஜித், பெருங்
காயம், முத்து, ஹிமாலய
மூலிகைகள் முதலியன
உங்களுக்குத் தேவையானல்—

முன் பின்னறியாததும்
நம்பிக்கையில்லாததுமான
ஸ்தாபனங்களோடு
ஒருபோதும் பரீக்ஷை செய்ய
வேண்டா.

*

*உங்கள் தேவைகளைப் பெறுவதற்குத் தக்க இடம்:*

கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)

ஜலந்தர் ஸிடி—(வட இந்தியா)

Grams : AMRUTHAM P. B. 82 Phone : 2208

# The Arya Vaidya Pharmacy (Coimbatore) Limited.

## H. O. : Trichy Road, Coimbatore-1

**THE IDEAL HOUSE FOR**

genuine Ayurvedic Medicines & Treatments

NEW DELHI BRANCH:
23-B, Pusa Road, Karol Bagh,
NEW DELHI — 5 (Phone 55687)

**OTHER OFFICES:**

Madras (Phone 85752), Cannanore (Phone 92), Palghat (Phone 195), Kozhikode (Phone 984), Ernakulam (Phone 494) Ponani (Phone 41), Alatur, Kanjikode & Coimbatore (Opp. Rly. Jn.)

**FACTORY:** KANJIKODE (S. Rly)

**NURSING HOME:** RAMANATHAPURAM, COIMBATORE (Phone 2194)

Qualified & experienced Physicians available at all Branches. Letters from patients personally attended to by the Chief Physician and prescriptions and medicines sent. Special Treatments, including "Pancha Karma" successfully carried out at Coimbatore and at Branches in Ernakulam and Ponani.

Price list in English, Hindi, Tamil & Malayalam sent free on application.

For further details, kindly contact :—

*Arya Vaidyan* P. V. RAMA VARIER
Chief Physician & Managing Agent

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்,

*(ஸ்தாபிதம் 1939)* Phone No. 660

*ரஸசாலை:*
28, A. தென்னூர் ரோடு,
திருச்சிராப்பள்ளி 1.

*ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:*
31, சின்னக்கடைத் தெரு.
திருச்சிராப்பள்ளி 2.

வைத்யர்களுக்குத்தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்த்ரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன.

*வைத்யர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.*

## எமது விசேஷ மருந்துகள்

**சந்திரிகாவலேஹம்.**

மூலம் எமது விசிஷ்டயோகஸங்கிரஹம், யாதவஜீயின் ஸித்த யோக ஸங்கிரஹம்.

ஸர்பகந்தா வம்சலோசனம் சதாவரீரஸம் சங்கபுஷ்பீரஸம் விதாரீரஸம் இவைகளை முக்யமாகக் கொண்ட புத்திப்ரஸாதன ரஸாயனம்.

புத்தியைத்தெளிவு படுத்தி உணர்ச்சிகளின் கடும் வேகத்தைக் குறைத்து மனதிற்கு சாந்தி அளிக்க வல்லது தூக்கமின்மை, புத்திப்பிரமம, கட்டுக்கடங்காத உணர்ச்சிக் கொந்தளிப்பு, தலைசுற்றல், மயக்கம், கைகால்களில் எரிச்சல் ரத்தக்கொதிப்பின் பல் வேறு நிலைகளில் பித்தரத்ததுஷ்டியால் ஏற்படும் உபத்திரவங்கள். இவைகளில் நம்பிக்கையுடன் கையாளக்கூடியது.

*விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்.*

S. V. ராதாகிருஷ்ணா சாஸ்திரி, *மானேஜிங் டைரெக்டர்*

# லக்ஷ்மி டிஸ்பென்ஸரி

**கீழ் ராஜவீதி, — புதுக்கோட்டை.**

கிளை — பொன்னமராவதி.

★

மிகப் பிரபல ஆயுர்வேத வைத்யரும்
குழந்தை வைத்ய நிபுணருமான
ஆயுர்வேத சிரோமணி, வைத்ய விசாரத

## ஸ்ரீ. P. விச்வநாத சர்மா

அவர்களின்
மேற்பார்வையில் நடைபெறும்

**மிகச் சிறந்த ஆயுர்வேத ஔஷத சாலை.**

எல்லா வியாதிகளுக்கும்
விசேஷமாக சிசு நோய்களுக்கும்
ஆயுர்வேத முறைப்படி
சிறந்த சிகித்ஸை அளிக்கப்படுகிறது

★

**எல்லா ஆயுர்வேத மருந்துகளும் இங்கு கிடைக்கும்.**

N. வைத்யநாதன்.
உதவி வைத்யர்.

P. விச்வநாத சர்மா
பிரதான வைத்யர்.



# வைத்ய சந்திரிகை.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| தொகுதி 23 | பிலவ – சித்திரை, வைகாசி. | பகுதி 5 |
|---|---|---|
| Vol. 23 | MAY 1961 | No. 5 |


आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।
द्राविडीयपृथुमण्डलादियं शश्वदुद्भवति वैद्यचन्द्रिका ॥

## ஸ்ரீ மாணிக்கவேலருடன் பேட்டி

சென்ற 6—4—61 அன்று தஞ்சையில் தமிழ்நாடு சுகாதார மந்திரி ஸ்ரீ மாணிக்கவேலர் அவர்களை தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலத்தின் சார்பில் ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரீ. ஸ்ரீ A. ராகவராவ், T. S. ஈச்வர அய்யர் இவர்கள் அடங்கிய தூது கோஷ்டி கண்டு கீழ்க்கண்ட யாதாஸ்தை ஸமர்ப்பித்துள்ளது,

சென்னையில் நடந்து வந்த இந்திய மருத்துவக் கல்லூரியை பாடதிட்ட சம்பந்தமான தவறுதல்கள் கலவரங்கள் காரணமாக மூடியதை அந்த ஸ்தாபனம் இந்திய வைத்திய முறைகளுக்குப் பயன்படாதிருந்ததன் காரணமாக யாவரும் வரவேற்பர். ஆனால் இதுவரை சர்க்கார் மூடியதற்கு மாற்றாக உடனே இந்திய வைத்திய முறைகளுக்கு உதவும் வகையில் உள்ள கல்வி திட்டத்துடன் ஒரு கலாசாலையை நிறுவாததும், இந்திய வைத்ய முறைகளுக்கெனவிருந்த கட்டடத்தை அலோபதி முறைக்குப் பயன்படுத்திக்கொண்டதும் வருந்தத் தக்கதே.

ஆனால் சமீபத்தில் அரசாங்கம் தனிப்பட்டு அலோபதி முறைக் கலப்பில்லாமல் இந்திய வைத்திய முறைப் பயிற்சிக்கான ஏற்பாடுகளைச் செய்து வருவது குறித்து மகிழ்ச்சியடைகிறோம். இதுவரை நடந்துவந்த கல்வி முறையில் அலோபதியின் இணைப்பிலேயே எல்லா கஷ்டங்களும் ஏற்பட்டதென நிரூபிக்கப் பட்டுவிட்டதால் நமது சர்க்கார் அதை உணர்ந்து விரைவிலேயே தனியாக இந்திய வைத்ய முறைகளுக்கென ஒரு பயிற்சித் திட்டத்தை வகுக்கவும் அதில் தேறும் மாணவர்களுக்குத் தகுந்த அந்தஸ்து அளிக்கவும், முன்வந்திருப்பதை ஆயுர்வேத வைத்யர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்கள்.

ஆயுர்வேதம் ஒரு பூர்ணமான விக்ஞானம். அது தனித்தே வளரவும் வாழவும் கூடும். அது தானே தன்வழியில் வளரத் தேவையான வசதிகளனைத்தும் கிடைக்க வழி செய்வதே இன்றையத் தேவை.

இதுசம்பந்தப்பட்ட ஆலோசனைகளைப் பெற இந்திய வைத்ய முறையினரையே அரசாங்கம் ஆலோசனையாளராக அழைக்க வேண்டும். மெடிக்கல் ஸர்வீஸ் டைரெக்டரையும் அலோபதி நிபுணர்களையும் கலந்து ஆலோசிப்பதைக் கைவிடவேண்டும். தனிப்பட்டு இந்திய வைத்திய இலாகா ஒன்றை சுகாதார மந்திரியின் காரியாலயத்துடன் நேரிடைத் தொடர்பு கொண்டுள்ளதாக அமைத்து இந்திய வைத்யக் கல்லூரி நிறுவனத்தையும் இந்திய வைத்ய நிர்வாஹத்தையும் அதனிடம் ஒப்படைக்கவேண்டும். ஆயுர்வேதம் சித்தம் யுனானி இம் மூன்று முறைகளுக்கும் தனித் தனியாக ஆலோசனையாளர் குழு நிறுவப்படவேண்டும்.

கல்வி திட்ட விஷயமாக சென்னை ஸர்வகலாசாலையின் B. I. M. திட்டத்தையும் சமீபத்தில் மத்யசர்க்கார் வெளியிட்டுள்ள திட்டத்தையும் பரிசீலித்து நல்ல உபகாரமளிக்கும் ஏதாவதொன்றைப் பின்பற்றலாம். தகுந்த அந்தஸ்து அளிக்கும் பக்ஷத்தில் அதிகமாக மாணவர்கள் கிடைப்பார்கள்.

அதனால் ஜூலை மாதத்திலேயே ஒரு கல்லூரி ஆரம்பிக்கும் வகையில் உடன் ஆலோசனையாளர் குழுக்களை சுகாதார மந்திரி

யின் நேரிடையான மேற்பார்வையில் ஏற்படுத்தி ஆவன செய்யக் கோருகிறோம். இப்பணியில் மகாமண்டலம் எப்போதும் தமது சேவையைச் செய்யக் காத்திருக்கிறது.

# மத்ய மந்திரி கேஸ்கருடன் பேட்டி

*தமிழ் நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் சார்பில் திருச்சிக்கு **3—4—1961** அன்று வந்திருந்த மத்ய செய்தி பரப்பிலாகா மந்திரி ஸ்ரீ B. V. கேஸ்கர் அவர்களை ஸ்ரீ V. R. நடராஜ சாஸ்திரி, ஸ்ரீ A. ராகவராவ், ஸ்ரீ T. S. ஈச்வர அய்யர் இவர்கள் அடங்கிய தூது கோஷ்டி பேட்டி கண்டு ஒரு கோரிக்கையை சமர்ப்பித்துள்ளனர். அது பின்வருமாறு :*

*" பிராந்திய ஆகாசவாணி நிறுவனங்களில் சுகாதாரத்தைப் பற்றிப் பேச்சுகள் நடைபெற்றுவருவது பொதுமக்களுக்கு மிகவும் உதவுகின்றன. ஆனால் அவைகளில் அலோபதி முறையினரே பங்கெடுத்துக்கொள்ள அழைக்கப்படுகின்றனர். ஆயுர்வேதத்தில் தனிப்பட்ட மனிதனுக்கும் மனித ஸமூகத்திற்கும் பொது வாழ்க்கைக்கும், சரீரத்திற்கும் மனத்திற்கும் வியாதி வராமல் ஆரோக்யத்தைப் பாதுகாக்கப் பயன்படக்கூடிய முக்கியக் கருத்துக்கள் ஆயுர்வேதத்திலும் மற்ற யோகம் தர்ம சாஸ்திரம் அர்த்த சாஸ்திரம் முதலிய நூல்களிலும் பரந்து இடப்பதை யொட்டி அவைகளை மக்களுக்குப் பயன்படும் வகையில் பிராந்திய மொழிகளில் தொகுத்து ஆகாசவாணியில் பேசச் செய்வது மிகவும் உபகாரமளிக்கும் என்ற விஷயத்தை மந்திரியின் கவனத்திற்குக் கொணர விரும்புகிறோம். மந்திரியார் ஆயுர்வேத முறையில் சுகாதாரப் பேச்சுக்களை பிராந்திய வானொலி நிறுவனங்கள் மூலம் பரப்பவேண்டிய ஏற்பாடுகளை உடன் செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்."*

*இந்தக் கோரிக்கையை ஏற்று மந்திரி தாமும் ஆவன செய்வதாயும் மத்ய சுகாதார மந்திரிக்கு இதுவிஷயமாக ஞாபகப் படுத்தும்படியும் கூறினர்.*

*[சமீபத்தில் டில்லி அகில இந்திய ரேடியோ டைரெக்டர் ஜனரல் காரியாலயத்திலிருந்து (நெ. 15 (23) 61 P I.*

*27—4—1961) இந்த நமது கோரிக்கைக்கு வந்த பதிலில் வானொலி மூலம் நடக்கும் ஆரோக்யப் பேச்சுக்களில் எல்லா முறையினரும் கலந்துகொள்ளலாமாதலாலும் ஆயுர்வேத முறையினர் பேசக்கூடாதெனத் தடையொன்றுமில்லாததாலும் தங்களது பிராந்தியத்திலுள்ள வானொலி நிலயத்தினரைக் கண்டு இதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு எழுதியிருப்பது கவனிக்கத்தக்கது.]*

---

# சேலம் ஜில்லா கிளை அங்கத்தினர்களுக்கு வேண்டுகோளும் அறிக்கையும்.

*அன்புடையீர்!*

*நிர்வாகத்திலுள்ள முக்கியஸ்தர்கள் பல அலுவல்களினால் மாதா மாதம் தொடர்ந்து சேலம் கிளையால் கூட்டம் இதுவரை நடத்தப்படவில்லை. நாளது 10—5—61 மாலை 3-மணிக்கு சேலம் ஜூபிலி மார்கெட்டுக்கு எதிர்பக்கமுள்ள மருந்துக்கடை திரு M. ராஜா பிள்ளை அவர்கள் குடோன் கட்டிடத்தில் விசேஷக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் நமது தற்கால நிலைமை, வைத்தியர்கள் பதிவு பற்றியும், மாதாமாதம் கூட்டம் நடத்தி அதில் தக்க வைத்திய அறிஞர்களைக் கொண்டு சித்த ஆயுர்வேத வைத்தியத்தில் நோய், நிதானம், சிகிச்சை முதலியவற்றைப் பிரசங்கிக்க ஏற்பாடு செய்யப்படும். ஆதலால் அங்கத்தினர்கள் அக்கூட்டத்தில் கலந்துகொள்வதுடன் தலைமைக்கும் கிளைக்கும் சேர்ந்த சந்தாவான ரூ. 7/-ம் உடனடியாக பொக்கிஷதார் ஸ்ரீ M. ராஜா பிள்ளை, மருநதுககடை, கடைவீதி, சேலம்-1 என்ற விலாசத்திற்கு அனுப்பியோ, நேரில் கொடுத்தோ ரசீது பெற்றுக்கொள்ளவேண்டுவதுடன் தொடர்ந்து அங்கத்தினராக இருக்க விருப்பமில்லாதவர்கள் இதுவரை உள்ள சந்தா பாக்கியைக் கொடுப்பதுடன் விருப்பமில்லை யென்பதையும் தெரிவிதது விட்டால் நிர்வாகத்தை அதற்கேற்றபடி அமைத்து நல்ல முறையில் நடத்த சௌகரியபபடும். மே மாத 30-ந் தேதிக்குள் குறைந்தது இவ்வாண்டு சந்தாவாவது செலுத்தாதவர்களுக்கு இனி சங்கத்திலிருநது கடிதப் போக்குவரத்து முதல் எந்தவிதமான தொடர்பும் வைத்துக்கொள்ளமாட்டாதென்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.*

இங்ஙனம்

R. K. பழனியப்பா,
*காரியதரிசி*
11 B. தெய்வநாயகம் பிள்ளை தெரு, சேலம்-2

*சேலம்-2*
29—4—61

# சிறுநீரின் ஆமபக்வநிலைகள்.

[வைத்ய. S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ, திருச்சி.]

(மார்ச்சு இதழிலிருந்து தொடர்ந்தது.)

[திருச்சி ஆயுர்வேத ஸபையில் 3—5—1961 அன்று ஸ்ரீ சாஸ்திரீ நிகழ்த்திய மூத்திரஸம்வஹனத்தின் பிராகிருத வைகிருத நிலைகள் என்ற பேச்சின் ஸாரம் இக்கட்டுரை மூலம் வெளியாகின்றது. —ஆசிரியர்.]

## 2. உதகவஹஸ்ரோதஸ்கள்.

மூத்திரம் என்பது என்ன? உட்கொள்ளும் உணவுப் பொருள்களில் எந்தப் பகுதி மூத்திரமாகின்றது? மூத்திரமாகப் பரிணமமாகும் முன்னும் பின்னும் அது அடையும் மாறுதல்கள் யாவை? என்பவை மூத்திரத்தின் ஆமபக்வ நிலைகளை அறிய உதவும்.

உதகம், தோயம் என்று சரீரத்தில் உள்ள ஜலமாகத் திரவ உருவில் காணப்படும் அம்சத்தைக் குறிப்பிடுகிறார் சரகர். உதகம் தோயம் என்ற சொற்கள் பொதுவாக நீரைக் குறிப்பிடுகின்றன. உடலிலுள்ள எந்த நீர்ப்பகுதியை இப்பெயரால் சரகர் குறிப்பிடுகிறார் என்பதும் கவனிக்கத் தக்கது. சரீர ஸங்க்யா சாரீரத்தில் உடலிலுள்ள பல்வேறு அம்சங்களை அஞ்சலியால் அளக்கிறார் ஆசார்யர். அதில் உடலிலுள்ள உதகப் பகுதி 10 அஞ்சலி யளவாகின்றது. அதன் விரிவைக் கூறும் போது புரீஷத்தை இளக்கி வெளியேற்ற உதவுவதும், மூத்திரத்தையும் ரக்தத்தையும் மற்ற திரவதாதுக்களையும் திரவநிலையிலேயே பாதுகாத்து வருவதும், சரீரத்தின் மேல் தோலுக்குள் அடங்கியிருந்து புண்ணாகும் போது கசிந்து லஸீகா என்ற பெயருடனும், சூடு பட்டு இளகி வெளியாகி வியர்வை என்ற பெயருடனும் வெளியாவதும் உதகம் எனப்படும் என்கிறார்.* ஆக ரஸரக்தாதி தாதுக்களிலுள்ள ஜலாம்சம், புரீஷம்

---

* दशोदकस्याञ्जलयः स्वेनाञ्जलिप्रमाणेन। यत्तु प्रच्यवमानं पुरीषमनुबध्नात्यतियोगेन। तथा मूत्रं रुधिरमन्यांश्च शरीरधातून्। यत्तु सर्वशरीरचरं बाह्या त्वग्बिभर्ति। यत्तु त्वगन्तरे व्रणगतं लसीकाशब्दं लभते। यच्चोष्मणाऽनुबद्धं लोमकूपेभ्यो निष्पतत् स्वेदशब्दमवाप्नोति। तदुदकं दशाञ्जलिप्रमाणम्। (சரகசாரீரம் 7 அத்தியாயம்.)

மூத்திரம் ஸ்வேதம் முதலிய மலங்களின் ஜலாம்சம், லஸிகா முதலிய உபதாதுக்களின் ஜலாம்சம் இவையனைத்தும் உதகம் எனப்படும் எனக் கொள்ளலாம். இந்த ஜலாம்சத்தைக் கொண்டு செலுத்தும் ஸ்ரோதஸ்ஸுகளையும் தமனிகளையும் பற்றியும் ஆசாரியர்கள் குறிப்பிடுகின்றனர்.* உதகவஹஸ்ரோதஸ்ஸுகளாகக் குறிப்பிடப்படுபவை உடலில் ஜலாம்சக்குறைவை நாக்கு தொண்டை முதலிய இடங்களில் ஏற்படும் வரட்சி மூலம் உணர்த்துபவை. இவை பிரகிருதி நிலையில் சரீரதாரணத்திற்குத் தேவையான ஜலாம்சத்தைப் பெற்றுப் பகிர்ந்தளிக்கும் பணியைப் புரிபவை. உதகவஹ தமனிகள் இரண்டு தனிப்பட்டு ஸுச்ருதரால் குறிப்பிடப்படுகின்றன. இவ்விரண்டும் உணவு பக்குவமானதும் அதிலுள்ள ஸாரத்தையும் மலத்தையும் பிரிக்கும் போது திரவமான மலமாக ஆகத் தகுதியுள்ளதை அகற்ற உதவுபவை.† ஆக இத் தமனிகள் மலாம்சங்களில் திரவத்தில் கரையக் கூடியவைகளையும், திரவமாகக் கூடியவைகளையும் திரவமாக இருப்பவைகளையும் உணவிலிருந்து பிரித்து பஸ்தி முகத்திற்குக் கொண்டு சேர்க்கின்றன: பஸ்தியை அடைந்ததும் மூத்திரம் என்ற பெயரை அடையும் திரவ மலம் அதற்கு முன்னிலையில் உதகம் தோயம் என்ற பெயருடன் சிலவிடங்களிலும், மூத்திர மென்றே சிலவிடங்களிலும் குறிப்பிடப் படுகின்றது.

---

. दशोदकाञ्जलय इत्यादावभिधायापि तदुदकं दशाञ्जलिप्रमाणमिति पुनर्यत्करोति, तेन मध्यग्रन्थकृतलसीकास्वेदादिसंज्ञया उदकस्य अनन्यतां दर्शयति। (அங்கேயே சக்ரபாணியின் உரை.)

* उदकवहस्रोतसां तालुमूलं क्लोम च। प्रदुष्टानां तु खल्वेषामिदं विशेषविज्ञानं भवति। तद्यथा जिह्वाताल्वोष्ठकण्ठक्लोमशोषं पिपासां चातिप्रवृद्धां दृष्ट्वा उदकवहान्यस्य स्रोतांसि प्रदुष्टानीति विद्यात्।

(சரக—ஸ்ரோதோவிமானம். 5-வது அத்தியாயம்.)

उदकवहे द्वे तयोर्मूलं तालु क्लोम च। तत्र विद्धस्य पिपासा सद्यो मरणं च (ஸுச்ருத—சாரீரம். 9-வது அத்தியாயம்.)

† तोयवहे द्वे (ஸுச்ருத—சாரீரம் 9-வது அத்தியாயம்)

அங்கேயுள்ள டல்லணரின் உரையும் கவனிக்கத் தக்கது.

द्वे अन्नवाहिन्यावन्त्राश्रिते। न हि पित्ताशये रसमूत्रपुरीषभावेन विविच्यमानस्याहारस्यान्नभावोऽस्ति। नापि तोयस्य तोयभावना। तेन

இந்த உதக-மூத்திரங்கள் உடலில் எவ்வகையில் பரவிப் பாய்ந்து வெளியேறுகின்றன? இவைகளின் பிராகிருத (இயற்கைக் கொத்த ஆரோக்ய ஹிதமான) ஸம்வஹனம் எத்தகையது? வைகிருத (ஆரோக்யத்திற்கு இடையூறான இயற்கைக்கு மாறுபட்ட) ஸம்வஹனம் எத்தகையது? என்பதும் விரிவாக ஆராயவேண்டியவையே.

நவீன வைத்ய முறையின் சாரீரம் போன்று விஷயவாரியாக ஆயுர்வேதசாரீரம் தொகுக்கப்படவில்லை எனக் குறை கூறுபவர் உளர். ஆயுர்வேத ஆசார்யர்கள் வகுத்துக்கொண்ட தொகுப்பு முறை வேறு என்பது ஏனோ அவர்களுக்குப் புலப்படுவதில்லை. நவீன வைத்யர்கள் வகுத்துள்ள முறையில் ஆயுர்வேதாசார்யர்கள் செல்லவில்லை என்பது குறையாகில் அது இன்று நீக்கக்கூடியதல்ல. அதனால் மூத்ர ஸம்வஹனத்தின் பிராகிருத வைகிருத நிலைகளை அறிய நாம் ஆசாரிய கிரந்தங்களில் பல்வேறு பக்கங்களைப் புரட்டிப் பார்க்கவேண்டி வருகிறது. வியாதிகளின் நிதானங்களைக் குறிப்பிடும் போது விகிருதி சாரீரம் சொல்லும் வகையிலேயே பிரகிருதி சாரீரத்தைச் சொல்லாமல் உணர்த்தும் முறையை ஆசாரியர்கள் கையாண்டுள்ளனர் என்பது அவர்களது நூல்களைக் கருத்தூன்றிப் படிப்பவர்கள் அறியும் உண்மை.

சரகர் சிகித்ஸாஸ்தானத்தில் உதரம், அதிஸாரம், சர்தி (வாந்தி) முதலியவைகளின் ஸம்ப்ராப்தியைக் கூறுமிடத்தில் தெளிவாக உதகவஹஸ்ரோதஸ்ஸுகளின் பிராகிருத—வைகிருத ஸம்வஹனத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

சரகர் உதரம் வரும் வகையைக் குறிப்பிடும் பகுதி பின்வருமாறு—“ஓர் கெட்ட வாதபித்த கபங்கள் ஸ்வேதவஹஸ்ரோதஸ் (வியர்வைக் குழாய்) ஸுகளிலும் உதகவஹஸ்ரோதஸ்களிலும் அடைப்பு ஏற்படுத்திச் சேர்ந்து பிராண அபான வாயுக்களின் இயற்கைச் செயல்கள் நடைபெற விடாது தடுத்து அக்னிமந்தத்தை ஏற்படுத்தி உதரத்தை உண்டாக்குகின்றன. உதரம் இரண்டுவகை— வயிற்றில் நீர் வைக்காத நிலையிலுள்ளவை, நீர்வைத்த நிலையிலுள்ளவை என. நீர்வைக்காத நிலை

---

तोयमत्र भविष्यतो मूत्रस्य कारणभूतं पक्वाहारविवेकजं द्रवमयमुदकमित्रोदकं। तदपि द्वे एव वहत:। तदेवोदकं बस्तिविवरप्राप्तं मूत्रमित्युच्यते।

யிலுள்ள உதரம் சிகித்ஸைக்கு வசப்படக் கூடியது. இந்நிலையில் சிகித்ஸை செய்யாமல் உபேக்ஷித்தால் வயிற்றில் உதகவஹஸ்ரோதஸ்ஸுகள் அடைபட்டு, தாதுக்களையும் நீர்க்கச்செய்து குழாய்களிலும் அதிகக் கசிவை ஏற்படுத்தி உதகவஹஸ்ரோதஸ் ஸ்தானங்களில் ஜலத்தை நிரப்புகின்றது. உதகவஹஸ்ரோதஸ்ஸுகளின் மூலம் உள் செல்லவேண்டிய ஜலாம்சம் தடைபட்டுவிட்டதால் வெளி ஸ்ரோதஸ்ஸுகளில் ஜலக் குறைவு ஏற்பட்டு வியர்வையும் ஏற்படுவதில்லை. ஆக திரவ ரூபமாக வெளியாக வேண்டிய மலாம்சம் இங்கு சல்யமாகத் தங்கி ஜலோதர நிலையை அடைகின்றது."*

ஜலோதரம் ஏற்பட நேரிடையான வேறு காரணமுமுண்டு. ஸ்நேஹபான முறையில் கிருதங்களையோ தைலங்களையோ யமகங்களையோ அதிக அளவில் உட்கொண்டவனும் அக்னிமந்தமுள்ளவனும் மிக இளைத்தவனும் வியாதியால் பலவீனமடைந்தவனும் கபவாதங்கள் மிகுதியால் நாவரட்சி ஏற்பட்டதன் காரணமாக ஜல அஜீர்ணம் ஏற்படுமளவில் அதிகமாக தண்ணீரைக் குடிப்பானேயாகில் அந்த ஜலம் ஜீர்ணமாகாமல் அடைபட்டுள்ள உதகவஹஸ்ரோதஸ்ஸுகளில் தங்கி ஜலோதரத்தை உண்டாக்குகின்றன.

ஆக இந்த ஸம்ப்ராப்தியில் உட்கொண்ட உணவிலுள்ள ஜலாம்சம் மலத்தை இளக்கத் தேவையானது போக மிகுதியுள்ளது குடலில் உதகவஹஸ்ரோதஸ்ஸுகள் மூலம் உறிஞ்சப்பட்டு ஸம்வஹனத்தில் சென்று மூத்திரமாகவும் வியர்வையாக

---

* रुद्ध्वा स्वेदांबुवाहीनि दोषाः स्रोतांसि संचिताः ।
प्राणाग्न्यपानान्सन्दूष्य जनयन्त्युदरं नृणाम् ।
स्नेहपीतस्य मन्दाग्नेः क्षीणस्यातिकृशस्य वा ।
अत्यंबुपानान्नष्टेऽग्नौ मारुतः क्लोम्नि संस्थितः ।
स्रोतस्सु रुद्धमार्गेषु कफश्चोदकमूर्छितः ।
वर्धयेतां तदेवांबु स्वस्थानादुदराय तौ ।

तत्र अचिरोत्पन्नमनुपद्रवमनुदकमप्राप्तमुदरं त्वरमाणश्चिकित्सेत् । उपेक्षितानां ह्येषां दोषाः स्वस्थानादपवृत्ताः परिपाकाद्द्रवीभूताः सन्धीन् स्रोतांसिचोपक्लेदयन्ति । स्वेदश्च बाह्येषु स्रोतस्सु प्रतिहतगतिः तिर्यगवतिष्ठमानः तदेवोदकमाप्याययति । ... (சரகசிகித்ஸை. 13-வது அத்யா.)

வும் பிரிபட்டு வெளியேற்றப்படும் கிரயத்தில், ஸாரமலப் பிரி விணையில் ஏற்படும் தவறும், உதகவஹஸ்ரோதஸ்ஸுகளின் துஷ்டியாகிய அடைப்பும் காரணமாக ஸாரமான உணவிலுள்ள திரவாம்சத்தையும் க்லேதமாக்கி உள்ளே ஸாராம்சம் சேராமல் உடல் முழுதும் தாதுக்ஷயம், அதனுல் அங்கங்களில் இளைப்பு, எல்லா திரவப்பகுதியையும் கிலேதமாக்கி ஸ்ரோதஸ்ஸுகளில் சேர்த்துவிடுவதால் வயிற்றில் ஜலம் நிரம்பிய பை போன்ற ஜலச்சேர்க்கை, உடலில் வேறு பாகங்களில் ஜலம் சேராததால் வியர்வைத் தடை, மூத்திரமாக மாறவேண்டிய முன்னிலையிலுள்ள உதகம்* தொடர்ந்து ஸம்வஹனத்தில் செல்லாததால் மூத்திரம் வெளியாகுவதில் குறைவு இவை ஏற்படுகின்றன. இதே இந்த உதக ஸம்வஹனத்தின் ஒருவகை விகிருதி சாரீரம். இதைக் கொண்டு பிரகிருதி சாரீரத்தை விளக்கி விடலாம்.

அதாவது— ஜடராக்னி சரியான நிலையிலிருக்க உண்ட உணவு நன்கு ஜீர்ணமாகி உணவிலிருந்தும் ஸாரமான ரஸமும் மலமான மூத்திர புரீஷங்களும பிரிபட்டு, மூத்திர நிலையை அடையத் தகுந்த ஜலாம்சம் குடலிலுள்ள உதகவஹஸ்ரோதஸ்ஸுகளின் மூலம் உள்ளிழுக்கப்பட்டு ரஸத்தோடு ஸஞ்சரிக்கையில் திரவமாக வெளியேற்றப் படவேண்டிய பக்குவமடைந்து பயனற்றுப் போன நிலையிலுள்ள தோஷ தாது மலங்களைத் தனது க்லேதன† (கரையச் செய்து திரவமாக்கும்) சக்தியால் கரைத்து ஸ்வேதவஹஸ்ரோதஸ்ஸுகளின் மூலம் வியர்வையாகவும் மூத்திரவஹஸ்ரோதஸ்ஸுகளின் மூலம் பஸ்திவழியாக மூத்திரமாகவும் வெளியேற்றுகின்றது.

ஆக பக்வாசயத்தில் மலமாகப் பிரிந்த திரவம் உள்செல்லும் வழியில் தடைபட்டு பக்வாசயத்திற்குப் பக்கத்திலேயே தேங்கி விடுவதால் ஏற்படும் நோய் நிலை ஜலோதரமாகும். இந்த நிலையில் இருவகையாக சிகித்ஸை செய்யப்படுகின்றது. ஒன்று உதகவஹஸ்ரோதஸ்ஸுகளில் தங்கியுள்ள ஜலாம்சத்தை சமீபத்திலுள்ள தோஷ சோதன மார்க்கமான பெருகுடல் வழியே வெளியேற்றுவது— ஜலவிரேசன முறையாகும். மற்றொன்று-

---

* भविष्यतो मूत्रस्य कारणभूतं पक्वाहारविवेकजं द्रवमयमुदकमिवोदकं ... (டல்லணர். சுச்ருதசாரீரம். 9-வது அத்தியாயம்.)

† विक्लेदकृन्मूत्रं
मूत्रस्य क्लेदवाहनम्

உதகவஹஸ்ரோதஸ்ஸுகள் மூலம் திரவமான அம்சம் உட்செல்வதைத் தடுத்து நிற்கும் அடைப்புகளை நீக்கி திரவமான அம்சம் சீக்கிரமே ஸம்வஹனத்தில் சென்று பஸ்தி வழியே வெளியாக்குவது— மூத்திர விரேசன சிகித்ஸையாகும்.

உதரத்திற்கு முழுவதும் மாறுபட்டவகையில் செயலாற்றும் மற்றொரு நோய் அதிஸாரமாகும். அதாவது மலமாகப் பிரிந்த திரவம் உள் செல்லும் வழியில் தடைபட்டுத் தேங்குவதற்குப் பதிலாக இங்கு, திரும்பி கன மலமான புரீஷத்தைத் திரவமாக்கி அதிஸாரத்தை உண்டாக்குகின்றது. சரகர் வாதாதிஸார ஸம்ப்ராப்தியைக் குறிப்பிடும் போது அக்னிமந்தத்தால் ஸாரமலப் பிரிவினை ஸரியாக நடக்காமல், உடலிலுள்ள மூத்திர— ஸ்வேதவஹங்களாக மாறவிருக்கும் உதகாம்சத்தை புரீஷாசயமான குடலுக்குக் கொணர்ந்து மலத்தைத் திரவமாக்கி வாயு வெளிக் கொணர்கிறதென்கிறார்.[1] இங்கு சிகித்ஸையைக் கூறும் போது அதிஸாரமாகும் புரீஷத்தின் ஆமபக்வநிலைக்கேற்ப சிகித்ஸை வகுக்கப்படுவதும் கவனிக்கத் தக்கது.[2] சரீரத்தில் உள்ள ஜலாம்சம் வெளியே செல்வதை உடன் தடுப்பது அவசியமாயினும் அதிஸாரத்திலே வெளியேகும் புரீஷமலம் ஆமமாக இருப்பின், அது வெளியேகும் வரை காமதித்தோ அல்லது பாசன ஔஷதங்களால் ஸாரமலப் பிரிவேற்பட வேண்டிய ஜீர்ணாவஸ்தையிலுள்ள உணவைப் பக்குவப் படுத்தியோ பிறகுதான் ஜலமாக மலம் வெளியேறுவதைத் தடுக்க வேண்டி வருகிறது. ஆனால் ஆகந்துகமாக ஏற்படும் கடும் அதிஸாரத்தில் விசேஷமாக உடலிலுள்ள ஜலாம்சம் வற்றிவிட்டால் கூட அங்கும் மலத்தைக் கட்டும் ஔஷதங்கள் பயனற்றுப் போவதையும் இந்நிலையில் ஏற்படும் ஜலாம்சக் குறைவை ஈடு செய்ய குடல் மூலமாக இல்லாமல் நேரிடையாக ரத்தத்திலேயே உப்பு நீரை ஏற்றி ஜலாம்சத்தை ஈடு செய்வதால் லாபமேற்படுவதையும் காண்கிறோம். அதிஸாரம் நின்றதன்

---

1. स वायुः कुपितोऽग्नावुपहते मूत्रस्वेदौ पुरीषाशयमुपहृत्य ताभ्यां पुरीषं द्रवीकृत्य अतीसाराय कल्पते ।

2. दोषाः सन्निचिता यस्य विदग्धाहारमूर्छिताः ।
अतीसाराय कल्पन्ते भूयस्तान्संप्रवर्तयेत् ॥
न तु संग्रहणं देयं पूर्वमामातिसारिणे ।
विबध्यमानाः प्राग्दोषाः जनयन्त्यामयान्बहून् ॥

அடையாளத்தைக் குறிப்பிடும் போது, மலப் பிருவிருத்தியில் லாமல் தனியே மூத்திரம் வெளியேறுவதை முக்கியமாகக் குறிப்பிட்டுள்ளதும் கவனிக்கத் தக்கது.* உள்ளேயுள்ள ஜலாம்சத்தையும் புரீஷாசயம் வழியே வெளியேற்றும் வகையி லுள்ள நோய் நின்றதற்கு அடையாளம் உள்ளேயுள்ள ஜலாம் சம் ஸம்வஹனத்தில் சரியே சென்று மூத்திரமாக மாறி வெளி யேறுவது என்று கண்டுள்ளது இங்கு கவனிக்கத் தக்கது.

பக்வாசயத்திலுள்ள சீர்கேடு காரணமாக இங்குள்ள வாயு வின் சக்தி சரீரத்தின் உள் வழியில் ஸஞ்சரிக்கும் ஜலாம்சத்தை யும் குடலுக்கு விபரீத வழியில் கொணர்கின்றது என்பது இங்குள்ள விகிருதி சாரீரம். புரீஷம் இளகி வெளியேறத் தகுந்த நிலைக்குத் தேவையானது போக மிகுதியுள்ள திரவாம் சம் உட்சேர்ந்து ஸம்வஹனமாகி மூத்திரமாகுவது என்பது பிரகிருதி சாரீரம்.

அதிஸாரத்தின் மற்றொரு வகை நோய் வாந்தியாகும். உட லிலுள்ள ஆப்ய (ஜல) தாது வெளியேறுவதில் கீழ்நோக்கிச் செல்வது அதிஸாரம். மேல் நோக்கிச் செல்வது வமனம். வமனத்தில் மிகவும் முற்றிய நிலையின் ஸம்பிராப்தியைச் சரகர் குறிப்பிடும் போதும் "புரீஷம், வியர்வை, மூத்திரம், உதகம் இவைகளை எடுத்துச் செல்லும் ஸ்ரோதஸ்ஸுகளை வாயு அடைத்து வாந்தியை ஏற்படுத்தும் போது மூத்திர புரீஷங் களின் நாற்றத்துடன் பெருங்குடலிலுள்ள திரவாம்சம் வெளி யேற்றப் படுகிற"தென்று அங்கும் உதகவஹஸ்ரோதஸ்ஸுகள் கெடுதியடைவதைக் குறிப்பிடுகிறார்.§

ஆக பக்வாசயத்திலிருந்து உதகவஹஸ்ரோதஸ்ஸுகளை அடையும் போது திரவமான மலத்திற்கு ஏற்படும் பிரகிருதி— விகிருதி பரிணாமங்களை உதரம் அதிஸாரம் வமனம் என்ற இந்த

---

* यस्योच्चाराद्विना मूत्रं पवनो वा प्रवर्तते ।
दीप्ताग्नेर्लघुकोष्ठस्य शान्तस्तस्योदरामयः ॥

§ विट्स्वेदमूत्राम्बुवहानि वायुः स्रोतांसि संरुध्य यदोर्ध्वमेति ।
उत्सन्नदोषस्य समाचितं तं दोषं समुद्धूय नरस्य कोष्ठात् ॥
विण्मूत्रयोस्तत् समवर्णगन्धं तृट्श्वासहिक्कार्तियुतं प्रसक्तम् ।
प्रच्छर्दयेत् दुष्टमिहातिवेगात्तयाऽर्दितश्चाशु विनाशमेति ॥

மூன்று நோய்களிலும் பார்த்தோம். இது மூத்திர ஸம்வஹனத்தின் முதல் நிலை. இனி இந்த 'உதகம்' உதகவஹஸ்ரோதஸ்கள் மூலம் ரஸஸம்வஹனத்தில் சேர்ந்து அங்கு ஏற்படும் பிரகிருதி விகிருதி பரிணாமங்களை உண்டாக்குவது இரண்டாவது நிலை. ரஸஸம்வஹனத்திலிருந்தும் விருக்க பஸ்திகள் மூலம் பிரிந்து மூத்திரமாகி வெளியேறும்போது ஏற்படும் பிரகிருதிவிகிருத பரிணாமங்களை அடைவதும் உண்டாக்குவதும் மூன்றாவது நிலை. முதல் நிலையை ஓரளவு விரித்துக் கூறினோம். இரண்டாவது மூன்றாவது நிலைகளைத் தொடர்ந்து ஆராய்வோம்.

## திருச்சி ஆயுர்வேத ஸபை

திருச்சி ஆயுர்வேத ஸபையின் தத்வித்ய ஸம்பாஷாபரிஷத் கூட்டம் 3—5—61 புதன்கிழமை மாலை 4-மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டடத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு வைத்ய பூஷணம் ஸ்ரீ பி. ஜி. கணபதி சாஸ்திரிகள் அவர்கள் தலைமை வஹித்தார்கள்.

ஸ்ரீ தன்வந்தரிப் பிரார்த்தனைக்குப் பிறகு சென்ற கூட்டத்தின் நடவடிக்கை வாசிக்கப்பட்டது.

வைத்யவிசாரத ஸ்ரீ எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள் "மூத்ர ஸம்வஹனத்தின் ப்ரக்ருதி விக்ருதி நிலைகள்" என்பது பற்றி ஆராய்ச்சியுடன்கூடியதோர் உபன்யாஸம் செய்தார்கள்.

வைத்ய ஸ்ரீ டி. எஸ். ஈச்வரன் அவர்கள் கடைசியில் வந்தனோபசாரம் கூறிய பிறகு கூட்டம் 5-30க்கு இனிது முடிவடைந்தது.

---

### ஸ்ரீரங்கம் ஸ்ரீலக்ஷ்மீ ப்ரஸந்ந வெங்கடேச ஆயுர்வேத தர்ம வைத்யசாலை, ஸ்ரீரங்கம்.

ஏப்ரல் மாதத்தில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை.

| | | |
|---|---|---|
| ஆண்கள் | 628 | |
| பெண்கள் | 568 | 1515 |
| சிறுவர் | 319 | |

நிர்வாஹஸ்தர்,
M. V. கிருஷ்ணமூர்த்தி ராவ்,
B. A., B. L., அட்வகேட்,
ராயபாளையம் பண்ணை,

அவைகளின் பிரிவினை பின்வருமாறு :—

| ஸுச்ருதர் வழியே* | | வாக்படர் வழியே. | |
|---|---|---|---|
| மாம்ஸ மர்மம் | 11 | மாம்ஸ மர்மம் | 10 |
| ஸிரா மர்மம் | 41 | ஸிரா மர்மம் | 37 |
| ஸ்நாயு மர்மம் | 27 | ஸ்நாயு மர்மம் | 23 |
| அஸ்தி மர்மம் | 8 | அஸ்தி மர்மம் | 8 |
| ஸந்தி மர்மம் | 20 | ஸந்தி மர்மம் | 20 |
| | | தமனீமர்மம் | 9 |
| ஆக | 107 | ஆக | 107 |

இப்பிரிவினை மர்மஸ்தானங்களில் முக்கியத்துவம் பெறும் தசைமுதலியவைகளை அடிப்படையாகக் கொண்டது.

இவைகளின் அங்கவாரியாகப் பிரிவினை பின்வருமாறு.†

1. **சாகா மர்மம் :**
   கைகள், கால்கள் ஒவ்வொன்றிலும் 11-11 ஆக 44
2. **உதர மர்மம்.**
   வயிற்றில் உள்ளது 3
3. **உரஸ் மர்மம் :**
   மார்பில் உள்ளது 9
4. **பிருஷ்ட மர்மம் :**
   முதுகில் உள்ளது 14
5. **உத்தமாங்க மர்மம் :**
   கழுத்திற்கு மேல் 37

ஆக 107

---

सप्तोत्तरं मर्मशतम्………

बाहुल्येन तु निर्देशः षोढैवं मर्मकल्पना ।

प्राणायतनसामान्यादैक्यं वा मर्मणां मतम् ॥ (அ. ஹ்ரு. சா.)

तत्रैकादश मांसमर्माणि, एकचत्वारिंशत्सिरामर्माणि, सप्तविंशतिः स्नायुमर्माणि, अष्टावस्थिमर्माणि, विंशतिः सन्धिमर्माणि, तदेतत्सप्तोत्तरं मर्मशतम् । (ஸுச்ருதசாரீரம்.)

† तेषामेकादशैकस्मिन् सक्थ्नि भवन्ति। एतेनेतरसक्थि बाहू च व्याख्यातौ । उदरोरसोर्द्वादश। चतुर्दश पृष्ठे । ग्रीवां प्रत्यूर्ध्वं सप्तत्रिंशत् ॥ (ஸுச்ருத சாரீரம்.)

இவைகளில் அடிபடும்போது உடலில் ஏற்படும் கெடுதியை ஒட்டி இவைகளை மேலும் ஐந்து வகையாகப் பிரிக்கலாம்.

1. **ஸத்யஃபிராணஹரம்:-** இவை அக்னிகுணம் மிகுந்தவை. அக்னிகுணம் உடன் குறையும்போது உயிர்நீங்கிவிடுகின்றது. இவைகளில் அடிபட்ட உடனேயே ஒருவாரத்திற்குள் மரணம் ஏற்படுகின்றது. இவை 19.[1]

2. **காலாந்தரப்ராணஹரம்:—**இவை ஸோம அக்னி குணமுள்ளவை. அக்னிகுணம் உடன் குறைந்தாலும் ஸோமகுணம் குறையும் வரை உயிர் தரித்திருந்து பிரிகிறது. 15 நாள் முதல் ஒரு மாதத்திற்குள் இவைகளில் ஏற்படும் தாக்குதல் மரணத்தை உண்டாக்கும். இவை 33.[2]

3. **விசல்யப்ராணஹரம்:—**இவை வாயு குணம் மிக்கவை. ஆயுதம் முதலியவைகளின் முனை இம்மர்ம இடங்களில் குத்திய பின் அவைகளை உடன் பிடுங்கி எடுக்காமலிருந்தால் முனைகளால் அடைபட்ட வாயு உள் தங்கியுள்ளவரை உயிர் தங்கும். சல்ய முனை பிடுங்கப்பட்டால் அதன் வழியே வாயு வெளியாகி உயிர் நீங்கும். அதனால் சல்யம் (குத்திய முள் ஆயுதம் முதலிய) புண்ணிலிருக்கும் வரை உயிருடனிருக்கலாம். அல்லது புண் பழுத்துத் தானே சல்யம் வெளியானாலும் பிழைக்கலாம். சல்யம் நீக்கப்பட்டால் ச்வாஸத்தாலும் காஸத்தாலும் மரணம் ஏற்படும். இவை 3.[3]

---

त्रीणि कोष्ठे नवोरसि. (அ. ஹ்ரு. சாரீரம்)

1. सद्यः प्राणहराण्याग्नेयानि । अग्निगुणेष्वाशुक्षीणेषु क्षपयन्ति ।
सद्यः प्राणहराण्येकोनविंशतिः । (ஸுச்ருத சாரீரம்.)
सप्ताहः परमस्तेषां कालः कालस्य कर्षणे । (அ. ஹ்ரு. சாரீரம்)

2. कालान्तरप्राणहराणि सौम्याग्नेयानि । अग्निगुणेष्वाशु क्षीणेषु, कालान्तरेण क्षपयन्ति । कालान्तरप्राणहराणि त्रयस्त्रिंशत् । (ஸுச்ருதசாரீரம்)
कालान्तरप्राणहरा माससमासार्धजीविताः । (அ. ஹ்ரு. சா.)

3. त्रीणि विशल्यघ्नानि । विशल्यप्राणहराणि वायव्यानि । शल्यमुखावरुद्धो यावदन्तः वायुस्तिष्ठति तावज्जीवति । उद्धृतमात्रे तु शल्ये मर्म-

***4. வைகல்யகரம்:***—இந்த வகையைச் சேர்ந்தவை ஸோம குணம் மிக்கவை. ஸோம சக்தி திடமும் குளிர்ச்சியுமுள்ளதானதால் இதில் அடிபட உயிர்ச்சேதமேற்படாது. அங்கவீனம் ஏற்படும். மிகச் சில சமயங்களில் இதில் அடிபட்டாலும் உயிர்ச்சேதம் ஏற்படும். இவை 44.*

***5. ருஜாகரம் :***— இந்த வகையைச் சார்ந்த மர்மங்கள் அக்னி-வாயு குணம் மிக்கவை. அக்னியும் வாயுவும் அதிகமாக வலியை உண்டாக்குபவை. இவை 8.†

ஆக உருவமைப்பை ஒட்டி மாம்ஸ மர்மம் முதலிய ஐந்து வகையாகவும் இடத்தை ஒட்டி சாகா மர்மம் முதலிய ஐந்து வகையாகவும் தன்மையை ஒட்டி ஸத்ய:பிராணஹரம் முதலிய ஐந்து வகையாகவும் பிரித்துள்ளனர்.

**மர்மங்களின் பெயர்.**

| ஒவ்வொரு காலிலு முள்ளவை : 11. | ஒவ்வொரு கையிலு முள்ளவை : 11 |
|---|---|
| க்ஷிப்ரம் | க்ஷிப்ரம் |
| தலஹ்ருதயம் | தலஹ்ருதயம் |
| கூர்ச்சம் | கூர்ச்சம் |
| கூர்ச்ச சிரஸ் | கூர்ச்ச சிரஸ் |
| குல்பம் | மணிபந்தம் |
| இந்திரபஸ்தி | இந்திரபஸ்தி |
| ஜாநு | கூர்பரம் |
| ஆணீ | ஆணீ |

स्थानाश्रितो वायुर्निष्क्रामति। तस्मात्सशल्यो जीवति। उद्धृतशल्यो म्रियते। पाकात्पतितशल्यो वा जीवति। (ஸுச்ருத சாரீரம்.)

शल्यापाये विनिर्गच्छन् श्वासात्कासाच्च हन्त्यसून्। (அ. ஹ்ரு. சாரீரம்)

* वैकल्यकराणि सौम्यानि। सोमो हि स्थिरत्वाच्छैत्याच्च प्राणावलम्बनं करोति। चतुश्चत्वारिंशद्वैकल्यकराणि। (ஸுச்ருதசாரீரம்)

हरन्ति तान्यपि प्राणान्कदाचिदभिघाततः। (அ. ஹ்ரு சாரீரம்.)

† रुजाकराण्यग्निवायुगुणभूयिष्ठानि। विशेषतश्च तौ रुजाकरौ।
(ஸுச்ருதசாரீரம்)

உர்வீ
லோஹிதாக்ஷம்
விடபம்
உர்வீ
லோஹிதாக்ஷம்
கக்ஷதரம்

**உதரத்தில் உள்ளவை :— 3**

குதம்
பஸ்தி
நாபி

**மார்பில் உள்ளவை :— 9**

ஹிருதயம்
ஸ்தந மூலம் (2)
ஸ்தந ரோஹிதம் (2)
அபலாபங்கள் (2)
அபஸ்தம்பங்கள் (2)

**முதுகில் உள்ளவை :— 14**

கடீகதருணம் (2)
குகுந்தரம் (2)
நிதம்பம் (2)
பார்ச்வ ஸந்தி (2)
பிருஹதீ (2)
அம்ஸபலகம் (2)
அம்ஸம் (2)

**கழுத்திற்கு மேலுள்ளவை :— 37.**

மந்யாதமனீ 2
நீலாதமனீ 2
மாத்ருகா 8
கிருகாடிகா 2
விதுரம் 2
பணம் 2
அபாங்கம் 2
ஆவர்தம் 2
உத்க்ஷேபம் 2
சங்கம் 2
ஸ்தபநீ
ஸீமந்தம் 5
சிருங்காடகம் 4
அதிபதி

**மாம்ஸ மர்மங்கள் :— 11.**

தலஹ்ருதயம் 4
இந்திரபஸ்தி 4
குதம்
ஸ்தனரோஹிதம் 2

**ஸிரா மர்மங்கள் : — 41.**

நீலாதமநீ 2
மந்யாதமநீ 2
மாத்ருகா 8
சிருங்காடகம் 4
அபாங்கம் 2
ஸ்தபநீ
பணம் 2
லோஹிதாக்ஷம் 4
ஸ்தநமூலம் 2
அபலாபம் 2
அபஸ்தம்பம் 2
ஹ்ருதயம்
நாபி
பார்ச்வ ஸந்தி 2
பிருஹதீ 2
உர்வீ 4

# வாரியர்

# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிசவாயு முதலிய எல்லாவிதமான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப்பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துக்கள்—தசை நார்களில் வலி, வீக்கம், கை, கால் வலி முதலிய எல்லா விதமான நோவுகளையும் நிச்சயமாக குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல் கண்—காது கோளாறுகள், ஒருத்தலை வலி, முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் (பிளட் பிரஷர்) என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கு வாயுவை நீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும், விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்தி குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

*விலை: 1 அவுன்ஸ் ரூ. 5-8-0 1/2 அவுன்ஸ் ரூ. 2-14-0.*

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

## அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

*சைனா பஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.*

*(1936-ல் நிறுவப்பட்டது.)*

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

**K. L. TALWAR & BROS.**

**MUSK MERCHANTS.**

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்குகளுக்கு எழுதினால்
இனாமாக அனுப்பப் பெறும்.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

**BHANOT BROTHERS.**

(REGD)

Wholesale Musk Saffron and Indian Drugs
Merchants.

LUDHIANA, PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்.